සියලුම හිමිකම් ඇවිරිණි/ முழுப் பதிப்புரிமையுடையது / All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

தரம் 06 | முதலாம் தவணைப் பரீட்சை - 2019 | T

# செயன்முறைத் தொழிநுட்பத் திறன்கள்

**விவசாயம் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (01)**

சாடிகளில் நாற்றுக்களை நடுதல் (உயர்பாத்தி முறைகளையும் இதற்காக பயன்படுத்த முடியும்).

01. தேவையான பொருட்கள் :-
- ❖ சிறிய சாடிகள் (பால் சட்டி, ஐஸ்கிரீம் பெட்டி போன்றவைகள்)
- ❖ வடித்தெடுக்கப்பட்ட மேற்பகுதி மண், கொம்போஸ்ட் அல்லது காய்ந்த மாட்டுச்சாணி, மணல்
- ❖ விதைகளில் சில (மிளகாய், கத்தரிக்காய், தக்காளி)
- ❖ நீர்

02. உபகரணங்கள் :-
- ❖ கை அள்ளு
- ❖ பூச்சாடி - 01
- ❖ தாச்சி - 03

03. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-
- ❖ 03 சாடிக் கலவைகளை வெவ்வேறாகத் தாச்சிகளில் இடவும். ஏனைய பொருட்கள் மற்றும் உபகரணங்களை வெவ்வேறாக ஒழுங்குபடுத்தி வேலைச்சூழலை ஏற்பாடு செய்து கொள்ளவும்.

04. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-
- ❖ வேலைச்சூழலிலுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி குறித்த காலத்தினுள் சாடிப் பாத்தியொன்றை ஒழுங்குபடுத்தி விதைகளைப் பயிரிடவும்.

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தேவையான பொருட்கள் உபகரணங்களைத் தெரிவு செய்தல். | (05 புள்ளிகள்) |
| 2. | உபகரணங்கள், பொருட்களைப் பயன்படுத்துவதில் காணப்படும் திறன். | (05 புள்ளிகள்) |
| 3. | ஒழுங்கு முறையாகவும் படிப்படியாகவும் செயற்பாட்டில் ஈடுபடல். | (05 புள்ளிகள்) |
| 4. | சரியாக முடித்தல். | (05 புள்ளிகள்) |
| 5. | வேலைச்சூழல் சுத்தமாக இருத்தல். | (05 புள்ளிகள்) |
| | | (25 புள்ளிகள்) |

**உணவு - செயன்முறைச் சோதனை - இலக்கம் (02)**

உணவுகளின் தரத்தை (பண்புகளை) பாதுகாக்கும் வகையில் நுகர்விற்கான உணவுகளை தெரிவு செய்தல்.

01. தேவையான பொருட்கள் :-
- ❖ தானியங்கள்
- ❖ காய்கறிகள்
- ❖ பொதி செய்யப்பட்ட உணவுகள்
- ❖ பருப்பு வகைகள்
- ❖ வாசனைப் பொருட்கள்
- ❖ பழவகைகள்
- ❖ மீன் உணவுகள்

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-
- ❖ மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்களை வைத்து வேலைச்சூழலை தயார்படுத்திக் கொள்ளவும்
- ❖ இந்த உணவு வகைகளின் சரியான பெயர்களையம் அதன் தொகுதிகளையும் பட்டியல் படுத்தவும். ஐந்து வகையான தொகுதிகளை பட்டியல் படுத்தினால் போதுமானது.
- ❖ அட்டவணையை மாணவர்களுக்கு வழங்கவும்.
- ❖ பின்வரும் நியதிகளுக்கேற்ப புள்ளி வழங்கவும்.
- ❖ நேரம் 20 நிமிடங்கள்.



kalvi.lk

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

- ❖ வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை அட்டவணைக்கேற்ப தொகுதிகளாக்கவும்.

| உணவுகளின் பெயர் | உணவுப் பொருள் உரித்தாகும் தொகுதி | |
|---|---|---|
| 1. ............................................ | ............................................ | 20 புள்ளிகள் |
| 2. ............................................ | ............................................ | 20 புள்ளிகள் |
| 3. ............................................ | ............................................ | 20 புள்ளிகள் |
| 4. ............................................ | ............................................ | 20 புள்ளிகள் |
| 5. ............................................ | ............................................ | 20 புள்ளிகள் |
| | | 100 புள்ளிகள் |

**<u>ஆரம்ப தொழில் நுட்பம் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (03)</u>**

மெழுகுவர்த்தி தாங்கியொன்றைத் தயாரித்தல்.


01. தேவையான பொருட்கள் :-


- ❖ சுத்தமாக்கப்பட்டு ஓட்டையிடப்பட்ட தேங்காய் சிரட்டையொன்று
- ❖ சிரட்டைக்கு ஒட்டுவதற்கு பொருத்தமான A-4 வெள்ளை தாளொன்று
- ❖ பைண்டர் பசைக்குப்பி
- ❖ காட்போட் துண்டொன்று (வெள்ளை)
- ❖ மெழுகுவர்த்தி

02. தேவையான உபகரணங்கள் :-

- ❖ கத்தரிக்கோல்
- ❖ நிறம் பூச்சிடுவதற்கு தேவையாயின் பஸ்டல் அல்லது பிளாட்டிக்கினம்


02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-

1. கழிவாக ஒதுக்கப்பட்ட ஓட்டையுடனான சிரட்டையொன்றை சுற்றி வர தும்புகளை ஒழுங்காக சீவி அகற்றி சுத்தம் செய்து கொண்டு வருமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவும்.
2. அச்சிரட்டையில் ஆமையின் ஓட்டினைப் போன்று இருக்கக்கூடியவாறு A-4 தாளினால் கீழ்கண்டவாறு ஒட்டுமாறு ஆலோசனைகளை வழங்கவும்.
3. 
4. ஆமையின் தலை மற்றும் கழுத்துப் பகுதிகளையும் கால், கைகளையும் காட்போட் துண்டினால் தயார் செய்து சிரட்டையில் ஒட்டுவதற்கு ஆலோசனைகளை வழங்கவும்.



03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

1. ஆசிரியரின் அறிவுறுத்தல்களுக்கேற்ப தும்புகள் சீவப்பட்டு சுத்தம் செய்யப்பட்ட தேங்காய் சிரட்டையொன்றை தயார்படுத்தி வீட்டிலிருந்து கொண்டு வரவும்.
2. நீங்கள் கொண்டு வந்த A-4 தாளினை ஆமையின் ஓட்டு வடிவம் வரக்கூடியவாறு கீறி அதனை வெட்டி சிரட்டையின் மேல் ஒட்டவும்.



3. அதன் பின்னர் ஆமையின் கழுத்து, தலைப்பகுதியினையும் கால் பகுதிகளையும் காட்போட் துண்டினைப் பயன்படுத்தி வெட்டி தயார் செய்யப்பட்ட சிரட்டையில் ஒட்டிக் கொள்ளவும்.



kalvi.lk

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

1. தேவையான பொருட்களை தயார் செய்து கொண்டு வரல் (முன் ஆயத்தம்) (05 புள்ளிகள்)
2. ஆமை ஓட்டினைத் தயார் செய்தல் (05 புள்ளிகள்)
3. கை, கால் மற்றும் கழுத்து, தலைப்பகுதிகளைத் தயார் செய்தல். (05 புள்ளிகள்)
4. உரிய நேரத்தில் முடித்தல். (05 புள்ளிகள்)
5. முடிவு (05 புள்ளிகள்)

(25 புள்ளிகள்)

**வணிக நடவடிக்கைகள் - செயன்முறைச் சோதனை - இலக்கம் (04)**

கழிவாக ஒதுக்கப்படும் பொருட்களைப் பயன்படுத்தி பொருளொன்றை உருவாக்குதல்.

01. தேவையான பொருட்கள் (மாணவர்கள் சேகரித்துக் கொள்ளவேண்டும்.)

- ❖ பாவனைக்கெடுக்காது பிரதேசத்தில் காணப்படுகின்ற கழிவாக ஒதுக்கப்படுகின்ற வளங்கள் (பழவகைகள், பிலா, ஈரப்பலா, வைக்கோல், மரங்களிலிருந்து காய்ந்து விழுந்துள்ள இலைகள், பூக்கள், காய்கள், மரத்தூள், உமித்தூள் போன்றவைகள்)
- ❖ கழிவுகள் (உதாரணம்) - பொருட்கள் பொதி செய்யப்பட்டு வரும் பொருட்கள், பிளாஸ்டிக் போத்தல், குளிர்பான உறிஞ்சு குழாய்கள், ஆப்பிள், தோட்ம்பழங்களை பாதுகாப்பாக சுற்றிவரும் தாங்கிகள், கழிவாக ஒதுக்கப்பட்ட கடதாசிகள, காட்போட், நிறப்பூச்சுக்கள், மையற்ற காபன் பேனைகள்.
- ❖ ஆக்கத்தினை/ பொருளினை தயாரிப்பதற்குத் தேவையான பசை, கத்தரிக்கோல் போன்றவைகள்.

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-

1. பாவனைக்கெடுக்கப்படாது ஒதுக்கப்படுகின்ற பிரதேசத்தில் காணப்படுகின்ற வளங்கள் தொடர்பில் மாணவர்களுடன் முன்னரே கலந்துரையாடி அவை தொடர்பில் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
2. நாம் பயன்படுத்திய பின்னர் சுற்றாடலில் வீசுகின்ற பொருட்கள் தொடர்பிலும் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தவும்.
3. ஒரு நியதிக்கு 05 புள்ளிகள் வீதம் வழங்கவும்.
4. வேலையினை முடிக்க 50 நிமிடங்கள் வழங்கவும்.

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

1. நீங்கள் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்ற பொருளினை தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களை முன்னரே சேகரித்து வைத்து உரிய நாளில் அவற்றைப் பாடசாலைக்கு கொண்டு வரவும்.
2. நீங்கள் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்ற பொருளினைத் தயாரிப்பது தொடர்பிலான பயிற்சியினை முன்னரே பெற்றுக் கொள்ளவும். (உதாரணம் - மாலை, கால்துடைப்பம் போன்ற ஆக்கங்கள்)

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

1. முன் ஆயத்தம் (05 புள்ளிகள்)
2. கழிவாக ஒதுக்கப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தல். (05 புள்ளிகள்)
3. ஆக்கமானது மனிதர்களின் தேவைகளுக்கான தீர்வாக அமைதல். (05 புள்ளிகள்)
4. தரம் 6 மாணவர்களின் மட்டத்திற்கு பொருத்தமான ஆக்கம். (05 புள்ளிகள்)
5. வேலைத்தளத்தினை சுத்தமாக பேணியமை. (05 புள்ளிகள்)

(25 புள்ளிகள்)

**சித்திரிப்புக் கலை - செயன்முறைச் சோதனை - இலக்கம் (05)**

வடிவகளைப் பயன்படுத்தி எளிய அலங்கார வடிவமொன்றைத் தயாரித்தல்.

01. தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் :-

- ❖ பத்திரிகை அல்லது வேறு கடதாசிகள் (பெரியளவிலான)
- ❖ அதற்கு நிறப்பூச்சிடுவதற்குத் தேவையான நிறங்கள்
- ❖ கத்தரிக்கோல், பசை



kalvi.lk

02. ஆசிரியருக்கான அறிவுறுத்தல்கள் :-

1. டிமை/ பத்திரிகை அல்லது இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய கடதாசி வகைகள், கத்தரிக்கோல், நிறப்பூச்சுகள் என்பவற்றை உள்ளடக்கியதாக வேலைச்சூழலை தயார்படுத்திக் கொள்ளவும்.
2. தான் வகுப்பறையில் கற்றவாறு கடதாசியினைப் பயன்படுத்தி தொப்பியொன்றைத் தயார் செய்வதற்கு ஆலோசனை வழங்கவும்.
3. அது பல்வேறு வடிவங்களுடன் கூடியதாக சிற்பனுட்பங்களைப் பயன்படுத்தி மனதைக் கவரக் கூடியதான ஆக்கமொன்றைத் தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கவும்.
4. ஆக்கத்திற்கேற்ப புள்ளி வழங்கவும்.
5. 50 நிமிடங்கள் வழங்கவும்.

03. மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள் :-

1. வேலைச்சூழலிலுள்ள பொருட்களைப் பயன்படுத்தியும் ஏனைய தேவையான பொருட்களைக் கொண்டும் தொப்பியொன்றைத் தயாரிக்கவும்.
2. அதனைக் கண்ணைக் கவரக்கூடியவாறு அலங்கரிக்கவும்.

**புள்ளி வழங்குவதற்கான நியதிகள்**

| | | |
|---|---|---|
| 1. | தேவையான பொருட்கள், உபகரணங்களைத் தெரிவு செய்தல். | (20 புள்ளிகள்) |
| 2. | உரிய வடிவத்திற்கேற்ப தொப்பியினைத் தயார் செய்தல். | (20 புள்ளிகள்) |
| 3. | நுட்பங்கள், நிறங்களைப் பயன்படுத்தி அலங்கரித்தலும் கண்ணைக் கவரக் கூடியதாக இருத்தல். | (20 புள்ளிகள்) |
| 4. | வேலைச் சூழலை சுத்தம் செய்தல். | (20 புள்ளிகள்) |
| 5. | முடிவு | (20 புள்ளிகள்) |
| | | (100 புள்ளிகள்) |

* * * * *

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

ONLINE CLASSES - 2025

*May*

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**